# வரைதல் வெளிப்பாட்டுக்கான களம்:

# இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை மற்றும் கலாசார பீட மாணவர்களை மையப்படுத்திய ஆய்வு

**Ashika M.A.P.**[73]**, & Fasila M.F.F.**[74]

**ஆய்வுச் சுருக்கம்**

கலைகளில் அழகியற் கலை முக்கியமானதாகும். அதில் வரைதல் பிரதான ஒரு கலையாகத் திகழ்கிறது. இக்கலையானது மாணவர்களிடையே இயற்கையாகவே காணப்படக்கூடிய ஒன்றாகவும் சில போது பயிற்சியின் மூலம் வளர்த்துக்கொள்ளக்கூடிய ஒரு கலையாகவும் காணப்படுகிறது. அந்த அடிப்படையில் இவ்வாய்வானது இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை மற்றும் கலாசார பீட மாணவர்களின் வரைதல் தொடர்பான ஈடுபாடு மற்றும் அதனை வெளிப்படுத்துவதற்கான களம் என்பன பற்றி ஆராயும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்விற்காக வேண்டி பல்கலைக்கழகத்தின் குறிப்பிட்ட பீடத்தின் சில மாணவர்களிடம் மற்றும் விரிவுரையாளர்களிடம் பெறப்பட்ட நேர்காணல்கள், கலந்துரையாடல்கள் என்பன முதலாம் நிலைத் தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் இவ்வாய்வுக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் குறித்த பீடத்தின் 100 மாணவர்களை எழுமாறாகத் தெரிவு செய்து அவர்களிடம் வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில் பெறப்பட்ட தரவுகளின் படி இங்கு கற்கின்ற மாணவர்களில் 71% ஆனோர் வரைதலில் ஆர்வம் காட்டக்கூடியவர்களாகவும், 5% ஆனோர் நடுநிலையானவர்களாகவும் 24% ஆனோர் ஆர்வமற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். இதன்படி இங்குள்ள மாணவர்களில் அதிகமானோர் வரைதல் துறையில் ஆர்வம் காட்டுகின்றனர் என்பது தெளிவாகின்றது. அதேவேளை, பல்கலைக்கழகத்தில் அவர்களின் திறமையினை வெளிக்காட்ட சந்தர்ப்பம் கிடைக்கின்றதா என்ற கேள்விக்கு அனைவரினதும் பதில் முழுமையாக ''இல்லை'' என்பதாகவே அமைந்திருந்தது. எனவே இவ்வாய்வின்படி இங்குள்ள மாணவர்களில் பெரும்பான்மையானோர் வரைதலில் ஆர்வம் காட்டக்கூடியவர்களாக இருக்கின்ற போதும் அவர்களது திறமைகளை வெளிக்காட்டுவதற்கான களம் காணப்படுவதில்லை என்பது தெளிவாகின்றது. மேலும் மாணவர்கள் வரைதல் கலை மூலம் எதிர்பார்க்கும் நன்மைகள் மற்றும் வரைதல் கலையை தமது பீடத்தில் முன்னெடுப்பதற்கான ஆலோசனைகளையும் கருத்துக்களாக முன்வைத்துள்ளனர். எனவே இவ்வாலோசனைகளினை நடைமுறைப்படுத்துவதனூடாக இப்பீடத்தில் கலையை மேலும் வளர்க்க முடியும்.

**பிரதான சொற்கள்:** கலை, வரைதல், மாணவர்கள், பீடம்

## அறிமுகம்

மனிதன் அறிவும் உணர்வுகளும் உடையவனாக படைக்கப்பட்டுள்ளான். அவனது அறிவின் வெளிப்பாடபக அறிவியற் கலைகளும் உணர்வுகளின் வெளிப்பாடாக அழகியற் கலைகளும் தோற்றம பெறலாயின. உலக வரலாற்றில் விந்தைகள் பல புரிந்த கிரேக்கர, உரோமர், இந்தியர், சீனர, பண்டைய எகிப்தியர் போன்று முஸ்லிம்களும் கலைத் துறையிலே தமது முத்திரையை பதித்து தமக்கான நிலையான ஒரு இடத்தை பெற்றிருக்கின்றனர்.

உலகில் பல கலைகள் காணப்படுகின்றன. அவற்றுள் வரைதல் என்பது முக்கிய பங்கு வகிக்கிறது. வரைதல் கலை என்பது ஒரு தனியான கலையாக மாத்திரமாக இல்லாது ஒரு பிரதான ஊடகமாகவும் திகழ்கின்றது. அதாவது ஆயிரம் வார்த்தைகளால் விளக்கக்கூடிய ஒரு விடயத்தை வரைதலினூடாக இலகுவாக விளக்கலாம். மேலும் உலகிலுள்ள எந்த மொழியினருக்கும் புரிந்து கொள்ளக்கூடிய பொதுவான ஊடகமாகவும் திகழ்கிறது.

கலைகளை வளர்க்க பல்வேறு களங்கள் காணப்படுகின்றன. அந்த வகையில் பல்கலைக்ககழகங்களும் இதில் பாரிய பங்கு செலத்துகிறது. பொதுவாக பல்கலைக்கழகம் என்பது ஒருவரது கலைகளை வளர்க்கின்ற ஒரு களமாக இருந்து வருகிறது. என்றாலும் சில போது அங்கு மனித வளம் சிறப்பாக காணப்பட்டாலும் பௌதீக வளம் குன்றிக் காணப்படுவதினால் மனித வளத்தில் காணப்படும் ஆற்றல்கள் மங்கிச் செல்வதற்கு வாய்ப்பாக அமைகின்றது.

To whom correspondence should be addressed: pathimaashikama9464@gmail.com

[73] Department of Arabic Language, South Eastern University of Sri Lanka.

[74] Department of Arabic Language, South Eastern University of Sri Lanka.

அந்த அடிப்படையில் 'வரைதல்' என்பதும் ஒரு மனிதனிடம் காணப்படுகின்ற சிறந்த கலைப்பண்பாகக் காணப்படுகின்றது. எனவே அக்கலையானது குறிப்பாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை மற்றும் கலாசார பீட மாணவர்களிடத்தில் எவ்வாறு காணப்படுகின்றது? , அங்கு வரைதல் கலையினை வளர்ப்பதற்காக எவ்வாறான களம் காணப்படுகின்றது? என்பன தொடர்பான ஒரு ஆய்வாகவே இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வு நோக்கம்**

1. இலங்கைத் தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின கலை மற்றும் கலாசார பீடத்தின் மாணவர்கள் வரைதல் கலையில் ஆர்வமுள்ளவர்களா? என்பதை பரிசீலனை செய்தல்.
2. குறித்த பீடத்தில் வரைதலுக்கான களம் அமைக்கப்பட்டுள்ளனவா? என பரிசீலனை செய்தல்.
3. குறித்த பீடத்தில் வரைதல் கலையை முன்னெடுப்பதற்கான ஆலோசனைகளை முன்னெடுத்தல்.

**ஆய்வுப் பிரச்சினை**

கலை மற்றும் கலாசார பீடத்துக்கு மாணவர்கள் பல்கலைக்கழகம் நுழையும் முன்னர் பல்வேறுபட்ட கலைத்துறைகளில் குறிப்பாக வரைதல் துறையில் ஆர்வம் கொண்டவர்களாகவும் , ஈடுபாடு காட்டியவர்களாகவும் உள்நுழைகின்றனர். ஆனால் அதன் பிற்பாடு அதற்கான களம் இல்லாமையினால் அவர்களது திறமை வீழச்சியடைந்து செல்கிறது.

**ஆய்வு முறை**


இவ்வாய்வு மத,கலாசார கற்கைகள் மற்றும் கல்வியியல் (Religious,Cultural studies and Education) ஆய்வாக அமையப் பெற்றுள்ளது.

இவ்வாய்வுக்காக வேண்டி பல்கலைக்கழகத்தின் குறிப்பிட்ட பீடத்தின் சில மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களிடம் பெறப்பட்ட நேர்காணல்கள் , கலந்துரையாடல்கள் என்பன முதலாம் நிலைத்தரவுகளாக பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் இவ்வாய்வுக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் குறித்த பீடத்தின் 100 மாணவர்களை எழுமாறாகத் தெரிவு செய்து அவர்களிடம் வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

**கலந்துரையாடல்களும் அடைவுகளும்**

இவ்வாய்வில் இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை மற்றும் கலாசார பீடத்தில் எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட 100 மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக இதில் ஆண்இ பெண் இருபாலாரையும் அடிப்படையாகக் கொண்டே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் சில மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களுடன் கலந்துரையாடியும் தகவல்கள் பெறப்பட்டுள்ளன.


வரைதல் கலை என்பது முக்கியமானதொரு கலையாகும். வளர்ந்து வரும் நாளைய தலைமுறையினரிடத்தில் இவ்வாறானதொரு பெறுமதியான கலை மழுங்கடிக்கப்பட்டுச் செல்வது சமுதாயத்திற்கும் பெறும் நஷ்டத்தை விளைவிக்கவல்ல, சீர்தூக்கிப்பார்க்கப் பட வேண்டிய ஒரு பிரச்சினையாக நோக்கப்படுகிறது.



உரு 01


உரு 01 இன் படி மாணவர்களுக்கு வழங்கப்பட்ட 100 வினாக்கொத்துக்களின் படி குறித்த பீடத்தில் கற்கின்ற மாணவர்களில் 5% ஆனோர் வரைதல் துறையில் மிகவும் ஆர்வம் அற்றவர்களாகவும், 9% ஆனோர் ஆர்வம் அற்றவர்களாகவும், 15% ஆனோர் ஓரளவு ஆர்வம் கொண்டவர்களாகவும், 45%ஆனோர் ஆர்வம் கொண்டவர்களாகவும் , 26% ஆனோர் வரைதல் துறையில் மிகவும் ஆர்வம் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர் என்பது தெளிவாகிறது

இதன் படி இப்பீட மாணவர்களில் பெரும்பான்மையானோர் வரைதல் துறையில் ஈடுபாடு உள்ளவர்கள் என்பதும் மிகக் குறைவானோரே அதில் ஆர்வமின்றி உள்ளனர் என்பதும் தெளிவாகிறது.




உரு 02


பெரும்பாலான பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தரத்தில் வரைதலை ஒரு பாடமாக தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் காணப்படுகிறது. அந்த வகையில் இவர்களில் 52% ஆனோர் க.பொ.த. சாதாரண தரத்தில் சித்திரத்தை ஒரு தேர்வுப் பாடமாக தெரிவு செய்தோராகவும் 48% ஆனோர் தெரிவு செய்யத் தவறியவர்களாகவும் உள்ளார்கள் என்பது தெளிவாகிறது.




உரு 03


குறிப்பாக சில பாடசாலைகளில் க.பொ.த. உயர்தரத்தில் வரைதலை ஒரு பாடமாக தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் காணப்படுவதில்லை. எனவே அப்பாடத்தை தெரிவு செய்யும் வீதம் க.பொ.த. சாதாரண தரத்தில் தெரிவு செய்யும் மாணவர்களின் வீதத்தோடு ஒப்பிடுகையில் குறைவாகவே காணப்படும். அந்த வகையில் க.பொ.த. உயர்தரத்தில் 88% ஆனோர் வரைதலை ஒரு தெரிவுப் பாடமாக

தெரிவு செய்ய சந்தர்ப்பம் அமைந்ததாகவும் 12% ஆனோரே அதற்குத் தவறியதாகவும் குறிப்பிட்டுள்ளனர். கீழுள்ள உரு இதனையே விளக்குகிறது.





உரு 04

குறிப்பாக வரைதலை பொருத்த வரை அதிகமான போட்டி நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அந்த வகையில் பாடசாலைக் காலங்களில் அவர்களில் 37% ஆனோரே இதுவரை தமது பாடசாலை காலங்களில் வரைதல் போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றியுள்ளார்கள் எனவும் 63% ஆனோருக்கு அதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை எனவும் குறிப்பிடடுள்ளார்கள்.




உரு 05

மாணவர்களுக்கிடையேயான கணக்கெடுப்பின்படி பல்கலைக்கழகத்தில் குறித்த பீடத்தில் இதுவரை வரைதல் தொடர்பான எந்த விதமான போட்டி நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றுவதற்கான களம் அமைய வில்லை என்பது அவர்களது கருத்தாகக் காணப்பட்டது.




உரு 06

கலை மற்றும் கலாசார பீடம் தவிர்த்து ஏனைய பீடங்களில் 4% ஆனோர் வரைதல் தொடர்பான போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றியுள்ளதாகவும் 96% ஆனோர் எவ்வித போட்டி நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

எனவே இவ்வரைபுகள் அனைத்தும் மாணவர்களின் ஆர்வம் மற்றும் அவற்றினை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் அமையப் பெற்றுள்ளனவா? ஏன ஆராயப்பட்டுள்ளது. அந்த

அடிப்படையில் நோக்குகின்ற போது ஆர்வமும் ஈடுபாடும் கொண்டுள்ள போதும் அவர்களுக்கான போதிய சந்தரப்பம், களம் அமையவில்லை என்பதும் தெளிவாகிறது.

மேலும் நாம் மேற்கொண்ட கருத்துக்கணிப்பின் போது பலர் வரைதல் கலையினூடாக எதிர்பார்க்கும் நன்மைகளை பல்கலைக்கழக மாணவர்கள் என்ற ரீதியில் விளக்கி இருந்தனர். அவற்றுள் சில….

- வரைதல் கலையை கலை மற்றம் கலாசார பீடத்தில் அறிமுகப்படுத்துவதினூடாக எதிர்காலத்தில் இலகுவாக தொழில் சுய வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளலாம். இதனூடாக தொழிற் சந்தையில் காணப்படும் போட்டித்தன்மையில் இருந்து இலகுவாக விடுபட வாய்ப்பாக அமையும்.
- சுருங்கிக்கிடக்கின்ற கற்பனை ஆற்றல் வளர்ச்சியடைய வாய்ப்பாக அமையும்.
- இப் பீடத்தில் பெரும்பாண்மையாக முஸ்லிம் மாணவர்கள் காணப்படுவதால் ஆரம்ப காலத்தில் முஸ்லிம்கள் கலையை வளர்த்தது போன்று மீண்டும் புதுப்பொழிவு பெற்று வளர காரணமாக அமையும் இதன் மூலம் முஸ்லிம்கள் ஏனைய வரைதல் துறையில் ஏனைய கலாச்சாரத்தவர்களின் தாக்கத்திலிருந்து விடுபடலாம். அரபு எழுத்தணிக்கலை வளர்ச்சி பெறும்.
- ஆர்வம் கொண்டோரின் ஆற்றல்களை வளர்க்கலாம்.
- எண்ணக்கருக்களை அனைவராலும் எழுத்து வடிவில் வெளிக்காட்டுவது சிரமமான காரியமாகும். ஆகவே வரைதல் என்பது இப்பணியை நிறைவேற்றும்.
- வரைதல் என்பது உளவியல் சார்ந்த ஒரு விடயமாக காணப்படுவதால் வரைதலினூடாக மாணவர்களின் மனநிலையை இலகுவாக அறியலாம்.
- வரைதலை மாணவர்களிடையே வளர்ப்பதனூடாக நூலறிவு மட்டுமன்றி சுய திறனும் வளர்ச்சியடையும்.
- மாணவர்களுக்கு பயனுள்ள பொழுதுபோக்காக அமையும்.
- எதிர் காலத்தில் சிறந்த கலையாற்றல் மிக்க பட்டதாரிகளை உருவாக்க முடியும்.
- வரைதல் என்பது பல நுட்பங்களையும் நுணுக்கங்களையும் கொண்டிருப்பதால் பொறுமை, நிதானம், ரசனை போன்ற குணப்பண்புகள் வளர்ச்சியடையும்.
- அகில இலங்கை ரீதியில் வரை வரைதல் போட்டிகள் நடைபெறுவதினால் சமூகத்தில் பிரபல்யமடைவதோடு, பரிசில்களையும் பெறலாம். அத்தோடு இலகுவாக தொழில் வாய்ப்புக்களையும் பெறலாம்.
- நாடலாவிய ரீதியில் பல்கலைக்கழகத்தின் பெயர் பிரசித்தி பெறும்.

இறுதியாக பீடத்தில் வரைதல் துறையை வளர்ச்சியடைச் செய்ய சில முயற்சிகளை மேற்கொள்ளலாம் என மாணவர்கள் தங்களது ஆலோசனைகளை முன்வைத்திருந்தார்கள். அவற்றுள் சில..

- வரைதலுக்காக வேண்டி ஒரு நாளை உத்தேசித்து அதனை ஒவ்வொரு வருடமும் விஷேட நாளாக அங்கீகாரப்படுத்தலாம்.
- வரைதல் கண்காட்சிகளை நடாத்தலாம்.
- வரைதல் போட்டி நிகழ்ச்சிகளை நடாத்தலாம்.
- வரைதல் காட்சிப்பலகைகளை வைக்கலாம்.
- வரைதல் சம்பந்தமான சஞ்சிகைகளை வெளியிடலாம்.
- வரைதல் சம்பந்தமான வலையத் தளங்களை உருவாக்கலாம்.

- பல்கலைக்கழகத்தில் நடைபெறும் வெளிக்கள நிகழ்வுகளின் போது அலங்கார வேலைகளுக்காக மாணவர்களின் வரைதல் ஆற்றலை வெளிப்படுத்தும் களமாக இலகுவாக மாற்றியமைக்க முடியும். மேலும் இவற்றின் போது விற்பனை முகவர்களை நாடுவதை விட மாணவர்களின் திறமைக்கு முன்னுரிமை வழங்குவது சிறப்பானதாகும்.
- வரைதல் துறையோடு சம்பந்தப்பட்ட வெளிப்பாட்டு உணர்வுகளை வெளிக்கொண்டு வரும் வகையில் நடவடிக்கைகளை தூண்டல்.
- ஏனைய பல்கலைக்கழகங்களில் இருந்து வரைதலுடன் தொடர்புடைய வளவாளர்களை கொண்டு வந்து பயிற்சிப்பட்டறைகளை நடாத்துதல்.
- சுவரோவியங்களை வரைதல்.
- வரைதல் சங்கமொன்றை நிறுவுதல்.
- வரைதலை ஒரு பாடமாக போதித்தல்.

**முடிவுரை**

மனிதன் இவ்வுலகில் அறிவுடனும் உணர்வுகளுடனும் படைக்கப்பட்டுள்ளான். அந்த அடிப்படையில் வரைதல் என்பதும் அவனது அறிவுடனும் உணர்வுகளை வெளிப்படுத்தக் கூடிய ஒரு விடயமாகவும் காணப்படுகிறது.

இவ்வாய்வானது இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை மற்றும் கலாசார பீட மாணவர்களின் வரைதல் தொடர்பான ஈடுபாடு மற்றும் அதனை வெளிப்படுதுவதற்கான களம் என்பன பற்றி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த அடிப்படையில் பெறப்பட்ட தரவுகளின் படி இங்கு கற்கின்ற மாணவர்களில் 71% ஆனோர் வரைதலில் ஆர்வம் காட்டக்கூடியவர்களாகவும், 5% ஆனோர் நடுநிலையானவர்களாகவும் , 24% ஆனோர் ஆர்வமற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். இதன் படி இங்குள்ள மாணவர்களில் அதிகமானோர் வரைதல் துறையில் ஆர்வம் காட்டுகின்றனர் என்பது தெளிவாகின்றது. அதே வேளை பல்கலைக்கழகத்தில் அவர்களின் திறமையினை வெளிக்காட்ட சந்தர்ப்பம் கிடைக்கின்றதா? என்ற கேள்விக்கு அனைவரினதும் பதில் முழுமையாக இல்லை என்பதாகவே அமைந்தது.

எனவே இவ்வாய்வின் படி இங்குள்ள மாணவர்களில் பெரும்பான்மையானோர் வரைதலில் ஆர்வம் காட்டக்கூடியவர்களாக இருக்கின்ற போதும் அவர்களது திறமைகளை வெளிக்காட்டுவதற்காக சந்தர்ப்பம் காணப்படுவதில்லை என்பது தெளிவாகின்றது.

**உசாத்துணைகள்**


1. வினாக்கொத்து (10-08-2017 – 15-08-2017) கலை கலாசார பீட மாணவர்கள்.
2. கலந்துரையாடல்கள் (14-08-2017)
3. நேர்காணல்கள் (15-08-2017)